பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**30 08 2026 SUNDAY 6.30 PM**

## மாநிலச்செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

1) நடைபாதை வியாபாரிகளுக்கான கடனுதவித் திட்டத்தின்மூலம் பெண்கள் பெரிய அளவில் பயனடைந்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2) உயர்கல்வித்துறையின் வளர்ச்சிக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3) தவெக அரசு முழு பதவிக்காலத்தையும் நிறைவு செய்யும் என்று உயர்கல்வித்துறை அமைச்சர் திரு விஸ்வநாதன் கூறியுள்ளார்.

4) திண்டுக்கல் மாவட்டம் வடமதுரை அருகே பால் வேன் மோதியதில் சாலையோரம் அமர்ந்திருந்த நான்கு குழந்தைகள் உயிரிழந்தனர்.

5) **Pontianak** சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Tanvi Patri** பட்டம் வென்றார்.

- இனி விரிவான செய்திகள் ---

<<<<<<>>>>>

நடைபாதை வியாபாரிகளுக்கான கடனுதவித் திட்டத்தின்மூலம் பெண்கள் பெரிய அளவில் பயனடைந்திருப்பதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

அகில இந்திய வானொலியில் இன்று ஒலிபரப்பான மன் கி பாத் நிகழ்ச்சியில் இதனை தெரிவித்த அவர், இந்த திட்டத்தின் பயனாளிகளில் **46** சதவீதம் பேர் பெண்கள் என்று குறிப்பிட்டார்.

நாடு முழுவதும் **35** லட்சம் பெண்கள் இந்த திட்டத்தின்கீழ் பயனடைந்துள்ளதாகவும் அவர் கூறினார்.

தூய்மைப்பணிகள் பெரிய அளவில் மாற்றத்தை ஏற்படுத்தும் என்றும் திரு நரேந்திர மோடி தெரிவித்தார்.

***(Sound Byte — Modi (1) ( தூய்மைப்பணிகள் ) — 40 Sec.)***

கொடைக்கானலை சேர்ந்த விவசாயி சந்திரசேகரன் அவக்கேடோ சாகுபடி செய்து கூடுதல் வருவாய் ஈட்டி வருவது குறித்தும் பிரதமர் தமது உரையில் எடுத்துரைத்தார்.

***(Sound Byte — Modi (2) ( அவக்கோடா ) — 39 Sec.)***

சிறிய முயற்சிகளினால் சமூகத்தில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்துவோர் குறித்த விவரங்களை பொதுமக்கள் தம்முடன் பகிர்ந்துகொள்ளுமாறும் திரு நரேந்திர மோடி கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையே, தம்மை பற்றி பிரதமர் குறிப்பிட்டு பேசியது மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது என்றும், அவக்கேடோ பல்வேறு

மருத்துவ குணங்களை கொண்டுள்ளதாகவும் கொடைக்கானலை சேர்ந்த திரு சந்திரசேகரன் எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte — சந்திரசேகரன் — 40 Sec.)***

இந்நிலையில், திருவண்ணாமலை மாவட்டம் உண்ணாமலைபாளையம் கிராமத்தில் பிரதமர் ஆற்றிய உரையின் ஒலிபரப்பு நிகழ்ச்சியில் பங்கேற்ற அப்பகுதியை சேர்ந்த ஒருவர், மத்திய அரசின் திட்டங்கள் தங்களுக்கு பயனளிக்கும் வகையில் உள்ளதாக தெரிவித்தார்.

***(Sound Byte — பயனாளிகள் - 55 Sec.)***

<<<<<<>>>>>

உயர்கல்வித்துறையின் வளர்ச்சிக்கு கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக, கல்வித்துறை உயரிய வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

2014-ஆம் ஆண்டு 760-ஆக இருந்த பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கை, தற்போது ஆயிரத்து 289-ஆக அதிகரித்துள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோல், கல்லூரிகளின் எண்ணிக்கையும் **38** ஆயிரத்திலிருந்து, **48** ஆயிரமாக அதிகரித்துள்ளதாக அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

தவெக அரசு முழு பதவிக்காலத்தையும் நிறைவு செய்யும் என்று உயர்கல்வித்துறை அமைச்சர் திரு விஸ்வநாதன் கூறியுள்ளார்.

திருச்சியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தவெக அரசு மீது மக்கள் முழு நம்பிக்கை கொண்டுள்ளதாக கூறினார்.

இதன்காரணமாக பதவிக்காலத்தை பூர்த்தி செய்வதில் சந்தேகம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

தமிழகத்தில் சட்டம் — ஒழுங்கு முறையாக பராமரிக்கப்படவில்லை என்று பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், ராஜபாளையம் பழைய பேருந்து நிலையம் அருகே இந்து முன்னணி நிர்வாகி ஒருவர் கொலைசெய்யப்பட்ட சம்பவம் அதிர்ச்சி அளிப்பதாக உள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

போதையில் இருந்த இளைஞர்கள் இந்த சம்பவத்தில் ஈடுபட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தவெக அரசு பொறுப்பேற்ற பின்னர் போதைப்பொருட்கள் சரளமாக புழங்குவதை சமூக வலைதளங்களில் வெளியாகும் காணொலி மூலம் அறிந்துகொள்ளலாம் என்று அவர் கூறியுள்ளார்.

இளைஞர்களின் எதிர்காலத்தையும், பொதுமக்களின் பாதுகாப்பையும் கேள்விக்குறியாக்கும் போதை கலாச்சாரத்திற்கு முதலமைச்சர் திரு விஜய் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் வலியுறுத்தியுள்ளார்.

<<<<<<>>>>>

தமிழகத்தின் எதிர்ப்பையும் மீறி, மேகதாதுவில் அணையை கட்ட கர்நாடக அரசு முயற்சிப்பது கண்டிக்கத்தக்கது என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கர்நாடக முதலமைச்சராக திரு D K சிவகுமார் பதவியேற்ற நாளில் இருந்து மேகதாது அணை கட்டுவதற்கான முயற்சிகளை தீவிரமாக மேற்கொண்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த சூழ்நிலையில் தமிழக அரசு அமைதியாக இருப்பது ஏற்புடையது அல்ல என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதனை கருத்தில்கொண்டு, மேகதாது விவகாரத்தில் தமிழகத்தின் உரிமைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை தீவிரப்படுத்த

வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் அந்த அறிக்கையில் கோரியுள்ளார்.

<<<<<<>>>>>>

திண்டுக்கல் மாவட்டம் வடமதுரை அருகே பால் வேன் மோதியதில் சாலையோரம் அமர்ந்திருந்த நான்கு குழந்தைகள் உயிரிழந்தனர்.

அதிவேகமாக வந்த பால்வேன் கட்டுப்பாட்டை இழந்து குழந்தைகள் மீது மோதியதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***(Voice Byte — திண்டுக்கல் ராஜசேகரன் — 28 Sec. )***

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

பெரம்பலூர் மாவட்டத்தில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில், ஒரு கோடி ரூபாய் மதிப்பிலான அரசின் நலத்திட்ட உதவிகளை மாநில அமைச்சர் திரு ராஜ்மோகன் பயனாளிகளுக்கு வழங்கினார்.

-------------------

கிருஷ்ணகிரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மாநில அமைச்சர் திரு அருண்ராஜ் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

------------------

விழுப்புரத்தில் சிறார்கள் பங்கேற்ற போதைப்பொருள் விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

-------------------

சேலம் மாவட்டம் நங்கவல்லி அருகே **Transformer-**ஐ பழுதுநீக்க சென்ற தொழிலாளி ஒருவர் மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தார்.

------------------

சேலம் மாவட்டம் ஓமலூர் அருகே புறா பிடிக்க சென்று **70** அடி கிணற்றில் விழுந்த இரண்டு சிறார்கள் பத்திரமாக மீட்கப்பட்டனர்.

---------------

தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி அருகே உள்ள ஸ்ரீ சுந்தரேச ஆஞ்சநேயர் ஆலய மகா கும்பாபிஷேகம் வெகுவிமரிசையாக இன்று நடைபெற்றது.

---------------

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட ஆதம்பாக்கம் ஏரியில் ஆகாய தாமரை அகற்றும் பணிகளை துணை ஆணையர் திரு அஃப்தாப் ரசூல் இன்று ஆய்வு செய்தார்.

<<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

**Pontianak** சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Tanvi Patri** பட்டம் வென்றார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், **21-5, 21-6** என்ற செட் கணக்கில், தென்கொரியாவின் **Kim Min Sun**-ஐ வென்றார்.

-----------------

ஆசிய கோப்பை **Track** சைக்கிள் சாம்பியன் போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் இப்போட்டியில் இந்தியா ஆடவர் ஜூனியர் பிரிவில் வெள்ளிப்பதக்கத்தையும், சீனியர் பிரிவில் வெண்கலப்பதக்கத்தையும் வென்றது.

இப்போட்டியில் இந்தியா இதுவரை **3** வெள்ளி, **4** வெண்கலப்பதக்கங்களை வென்றுள்ளது.

-----------------

மலேசியாவில் நடைபெற்ற சர்வதேச ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் அபய் சிங் பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், **11-7, 6-11, 3-11, 11-5, 12-10** என்ற செட் கணக்கில், ஹாங்காங்கின் **Henry Leung**-வை வென்றார்.

**<<<<<<END>>>>>**